DINAKARAN 08 JUNE 09

# ஈஷாயோக மையம் சார்பில் மரக்கன்று நடும் விழா

ஈரோடு, ஜூன் 8: ஈஷா யோக மையம் சார்பில் உலக சுற்றுப்புற சூழல் தினத்தையொட்டி ஆண்டுதோறும் ஈஷா பசுமைக்கரங்கள் திட்டம் மூலம் மரக்கன்றுகள் நட்டப்பட்டு வருகிறது. அதன்படி தமிழகம் முழுவதும் நடப்பாண்டில் ஈஷா யோக மையபம சார்பில் 25 மையங்களில் 25 லட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஈஷா யோகா மைய நிர்வாகி மெய்ஞானவேல் மற்றும் நிர்வாகிகள் கூறியதாவது:

தமிழகத்தின் இயற்கை வளங்களை பாதுகாக்கவும், இயற்கையோடு இணைந்து வாழவும் பசுமைக்கரங்கள் திட்டம் மூலம் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி தமிழகத்தின் பசுமைப்பரப்பை 33 சதவீதமாக அதிகரிக்கும் நோக்கத்தில் ஜக்கி வாசுதேவினால் உருவாக்கப்பட்ட ஈஷா அறக்கட்டளையின் பசுமைக்கரங்கள் திட்டம் துவக்கப்பட்டது. இத்திட்டத்தின் படி தமிழகம் முழுவதும் 11.4 கோடி மரக்கன்றுகளை நட்டு வளர்க்க திட்டமிடப்பட்டது. அதன்படி ஏற்கனவே தமிழகம் முழுவதும் பல லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு ஈஷா யோகா மையத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. கடந்த 2006ம் ஆண்டு அக்டோபர் 17ம் தேதி ஒரே நாளில் 8.5 லட்சம் மரக்கன்றுகளை ஈஷாயோக மையம் சார்பில் நடப்பட்டு அச்சாதனை உலக சாதனையாக கருதப்பட்டு கின்னஸ் புத்தகத்திலும் இடம் பெற்றுள்ளது.

தமிழகத்தை பொறுத்தவரையிலும் நடப்பாண்டில் ஈஷா யோகாவின் 25 மையங்கள் மூலம் 25 லட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மெய்ஞானவேல் தெரிவித்தார்.

அதன்படி ஈரோடு பஸ் ஸ்டாண்ட் அருகிலுள்ள ஈஷாயோக மைய வளாகத்தினுள் மரக்கன்று நடும் விழா நடந்தது.

விழாவில் மாநகராட்சி மேயர் குமார் முருகேஷ் மரக்கன்றுகளை நட்டு வைத்து பசுமை கரங்கள் திட்டத்தை வாழ்த்தி பேசினார்.

விழாவில் தொழிலதிபர்கள் சிவசுப்ரமணியன், சிவபூஷணம், சவுந்திரராஜன் ஈஷா யோகா தியான பொறுப்பாளர்கள் மற்றும் தியானம் செய்வோரும் திரளாக கலந்து கொண்டனர்.

ஈரோட்டை தொடர்ந்து சென்னை புழல் மத்திய சிறையில் டிஜிபி., நடராஜ் மரக்கன்றுகளை நட்டு இத்திட்டத்தை துவக்கி வைக்க உள்ளார் என்றும் மைய நிர்வாகிகள் தெரிவித்தனர்.